தலைவர்

கலைஞர் மேதினச் முழக்கம்



தலைவர்

கலைஞர்

மேதினச்
சூழுக்கம்

*

தலைமைக்கழக வெளியீடு

திராவிட முன்னேற்றக் கழகம்

"அறிவகம்"

இராயபுரம் : : சென்னை - 600 013.

முதற்பதிப்பு — மே, 1985

விலை ரூ. 1-00

அச்சிட்டோர் : ஜெம் பிரஸ், சென்னை-600 001.

இந்நூல்.....

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை சார்பில், 1-5-1985 அன்று, சென்னை இராயபுரம் 'அறிவகம்' அருகில் நடைபெற்ற மேதின விழாக் கூட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரையை இந்நூல் வடிவில் தி.மு.க. தலைமைநிலையம் பெருமையோடு வெளியிடுகிறது.

தலைவர் கலைஞர்
மேதின முழக்கம்

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் சார்பிலும், அதனோடு இணைந்துள்ள பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்களின் சார்பிலும், மேதினி போற்றும் மேநாள் விழாவினை அண்ணா கண்ட அறிவகத்தின் எதிரில் மிகுந்த எழுச்சியோடும் உணர்ச்சி கொந்தளிக்கின்ற வகையிலும் கொண்டாடுகின்ற இந்த வைபவத்தில் நானும் கலந்து கொண்டு தொழிலாளர்களுடைய மகிழ்ச்சியில் பங்கு பெறுகின்றேன்.

ஆனால் இந்த மே நாளில் நாம் பெறுகின்ற மகிழ்ச்சி முழுமையானது அல்ல என்பதை நீங்கள் அனைவரும் மிகநன்றாக அறிவீர்கள். காரணம் என்னவென்றும் உங்களுக்குத் தெரியும்.

தொழிலாளர்கள் விரும்புகின்ற — அவர்களுடைய உரிமைக் குரலுக்குக் கிடைக்க வேண்டிய வெற்றி இன்னமும் இந்தியத் திருநாட்டில் கிடைக்கவில்லை. ஆனாலும் கூட அந்த உரிமைகளைப் பெற தொடர்ந்து நாம் போர்க்கொடி உயர்த்துவோம் ஓரணியில் திரளுவோம் என்ற உறுதியினை எடுத்தக் கொள்ள இந்த விழா பயன்படுகிறது.

அதே நேரத்தில் நமக்கு மிக அருகில் உள்ள இலங்கைத் தீவில் தமிழர்கள் — தமிழர்கள் என்றாலே பாட்டாளிகள் தானே — அவர்கள் படும் துயரமும், அவர்கள் அன்றாடம் படுகொலைக்கு ஆளாகின்ற நிலைமையும் நம்முடைய காதுகளை ஒவ்வொரு நாளும் குடைந்து கொண்டிருக்கிறபோது, மேதின விழாவிலே ஒரு முழுமையான மகிழ்ச்சியைப்பெற்று நாம் கொண்டாட இயலவில்லை. காரணம் நாம் தொழிலாளர்கள் மாத்திரமல்ல; தமிழினத் தொழிலாளர்கள்.

சரியாகவோ தவறுகவோ தமிழினத்தில் நாம் பிறந்துவிட்ட காரணத்தால், தமிழினப் பட்டாளி மக்கள் இலங்கைத் தீவில் படுகொலைக்கும் மான பங்கத்திற்கும் — உடமைகளை இழக்க, உரிமை

களைப் பறிகொடுக்க இத்தகைய இன்னல்களுக்கும் இடையூறு களுக்கும் ஆளாகி, அகதிகளாக விரட்டப்படுகிற நேரத்தில் நாம் விழாவை முழுமையாகக் கொண்டாட இயலவில்லை.

இருந்தாலும்கூட உலகத்திலே எத்தனையோ துன்ப துயரங் களுக்கிடையிலேயும் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய எழுச்சியை எடுத்துக்காட்ட இந்த நாளை தனது நாள் ஆக்கிக்கொண்டிருக்கிற காரணத்தால் நாமும் கொண்டாடுகின்றோம்.

இந்த நாளில் இராயபுரம் பகுதியில் இந்த விழா கொண்டா டப்படுகிற காரணத்தால் மட்டுமல்ல; தமிழ்நாட்டில் எங்கே மே தின விழா கொண்டாடப்பட்டாலும் நாம் நினைவுகூர வேண் டியவை சில உண்டு.

தந்தை பெரியார் அவர்கள் எவ்வளவு முக்கியமானவரோ — பேரறிஞர் அண்ணா அவர்கள் எவ்வளவு முக்கியமானவரோ — அதைப் போலவே சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் அவர்களும் மிக முக்கியமானவர். சிங்காரவேலர் அவர்கள் 1946ம் ஆண்டு பிப்ர வரித் திங்கள் மறைந்தபோது பேரறிஞர் அண்ணா ஒரு இரங்கல் கட்டுரையைத் தீட்டினார். அது இரங்கல் கட்டுரை மாத்திரமல்ல; சிங்காரவேலருடைய வாழ்க்கையைச் சித்தரிக்கின்ற இலக்கியம்.

சிங்காரவேலர் ஒரு பொதுவுடைமைவாதி மாத்திரமல்ல; தொழிலாளர்களுடைய தோழர் மாத்திரமல்ல; அவர் ஒரு சுயமரி யாதை இயக்கச் சுடர் என்பதையும் அந்தக் கட்டுரையில் அண்ணா அவர்கள் விளக்கினார்கள். அது மாத்திரமல்ல; சிங்காரவேலர் ராயபுரத்திலே மீனவர்கள் குலத்திலே பிறக்காமல், மாம்பலம் — மயிலாப்பூரிலே பிறந்திருப்பாரேயானால் இந்நேரம் அவருக்கு மாஸ்கோவிலே கூட சிலை வைத்திருப்பார்கள் என்று அண்ணா அவர் கள் அன்று அந்தக் கட்டுரையின் மூலமாக விளக்கிக்காட்டினார்.

பகுத்தறிவுச் சிங்கமாக- சுயமரியாதைச் சுடரொளியாக, பொதுவுடைமைப் புலியாக சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் திகழ்ந் தார். எனவே அந்த நல்லவரை— வல்லவரை அந்த உண்மையான புரட்சித் தலைவரை இந்த மே தின விழாவில் வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறோம்.

பாட்டாளி வர்க்கத்திற்கு தி.மு. கழக ஆட்சியில் என்னென்ன பயன்கள் கிடைத்தன என்பதையும், இன்றைக்கு பாட்டாளி வர்க்கம் எந்த அளவுக்கு பழி வாங்கப்பட்டிருக்கிறது என்பதையும்,

யாட்டாளிகள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட சங்கத்தை அமைத்துக் கொள்ளக்கூட உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டு — அப்படி அமைக்கப்படுகின்ற அந்தச் சங்கங்கள் பல கூறுகளாக ஆக்கப்பட்டு—பிரித்தாளும் சூழ்ச்சியின் காரணமாக தொழிலாளர் களுக்கிடையே ஒருவரோடு ஒருவரை மோதவிடுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் உருவாக்கப்பட்டு — பாட்டாளி வர்க்கம் இன்றைக்கு பந்தாடப்படுகின்ற சூழ்நிலையையும் நாம் காணுகிறோம்.

இந்தியாவில் இன்றைக்கு ஒரு புதிய ஆட்சி ஏற்பட்டிருப்ப தாகச் சொல்கிறார்கள். எனக்கென்னவோ அதை நம்ப முடிய வில்லை. புதியவர் ஒருவர் பிரதமராக வந்திருக்கிறார் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரு புதிய ஆட்சி ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை.

"பழைய கள்; புதிய மொந்தை" என்பது ஒரு பழமொழி. அதைப் போல ஒரு புதிய மொந்தையிலே பழைய கள், அதுதான் இன்றைக்கு மத்தியில் நடைபெறுகின்ற இந்திரா காங்கிரஸ் ஆட்சி. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது வாரத்தில் மூன்று நாட்களாவது பிரதமர் ராஜீவ்காந்தி உதிர்க்கின்ற பொன் மொழிகள் வெளியிடப்படுகின்றன.

ராஜீவ் காந்தி "நவீன இந்தியாவை உருவாக்கப்போகிறேன்" என்று சொல்லுகிறார். ஆனால் அவர் ஒன்றை ஒத்துக் கொண்டிருக் கிறார். முப்பத்துஏழு ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் நவீன இந்தியாவை உருவாக்க உருப்படியான முயற்சி எதையும் இவரது தாயாரும் எடுத்துக் கொள்ளவில்லை; இவருடைய தாத்தாவும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை அவர் துலாம்பரமாக வெளிச்சம்போட்டுக் காட்டி "இனிமேல்தான் நவீன இந்தியாவை நாங்கள் உருவாக்கப் போகிறோம்" என்று சொல்லுகிறார்.

இந்த 'நவீனம்' என்ற சொல்லை உச்சரிக்கும்போது எனக்கு பழையகால சினிமாப் படங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. (அதைச் சொன்னால்தானே உங்களில் பலருக்குப் பிடிக்கிறது).

மௌன திரைப்படங்கள் வெளிவந்த காலம் ஒன்று உண்டு. அந்தப் படங்களில் வெறும் அபிநயம்-நடிப்பு மாத்திரம் இருக்கும். அப்படி அந்த நடிப்பை நாம் திரையிலே காணும்போது திரையரங் கத்தின் ஒரு மூலையில் கையிலே ஒருவன் மெகாபோனை வைத்துக் கொண்டு படத்தில் வரும் காட்சிகளுக்கும் விளக்கம் கொடுத்துக் கொண்டிருப்பான். அந்த பேசாப் படக் காலத்தில் 'சாரங்கதாரா'

என்று ஒரு படம் வந்தது. அந்த சாரங்கதாரா திரைப்படத்தில் எவ்வெனென்ன அம்சங்கள் இருந்ததோ அதே அம்சங்களோடு பேசுகின்ற படமாக சில ஆண்டுகளுக்குப் பிறகு தியாகராஜ பாகவதர் நடித்து 'நவீன சாரங்கதாரா' என்ற பெயரில் வெளிவந்தது.

நான் அந்த பேசாத படத்தையும் பார்த்தேன். பிறகு வந்த பேசும்படமான "நவீன சாரங்கதாரா' படத்தையும் பார்த்தேன். இரண்டிலும் ஒரே கதை தான்.

அதைப் போலத்தான் முப்பத்து ஏழு ஆண்டுக் காலமாக இந்தியாவில் நடைபெற்ற ஆட்சியும் ஒன்றுதான். இன்றைக்கு நவீன ஆட்சி என்று சொல்லுகிறார்களே—அந்த ஆட்சியும் ஒன்று தான்.

இந்த இரண்டு ஆட்சிகளுமே பாட்டாளி மக்களுக்கு எதிரான ஆட்சிதான். இந்த இரண்டு ஆட்சிகளுமே முதலாளிகளுக்கு கைலாகு கொடுக்கின்ற ஆட்சிகள்தான். அவர்களுக்கு துணையாக ஒரு 'பாங்கனுக' நமது மாநில அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

இலக்கியத்திலே பாங்கன்—பாங்கி என்று உண்டு. ஆணுக்கு ஒரு பாங்கனும், பெண்ணுக்கு ஒரு பாங்கியும் இருப்பார்கள். தோழன் தோழியைத்தான் பாங்கன்-பாங்கி என்று சொல்வார்கள். அதைப்போல மத்திய அரசுக்கு ஒரு பாங்கனுக மாநில அரசு இருக்கிறது. இதுவரை பாங்கனுக இருந்தது. எதிர்காலத்திலே பாங்கியாக ஆனாலும் ஆகலாம். அதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக நான் அறிகின்றேன்.

மத்திய அரசுக்கு பாங்கனுக இருக்கின்ற மாநில அரசும், மத்திய அரசும் முதலாளித்துவ சமுதாயம் மேலும் மேலும் ஆதிக்கம் பெறுகின்ற வகையில் செயல்படுகின்ற நிலையினைத் தான், தங்களது வரவு செலவுத் திட்டமானாலும், தொழில் திட்டங்களானாலும் அறிவிக்கின்ற வரிச் சலுகைகள் ஆனாலும்— அறிவிக்கின்ற பல்வேறு வளர்ச்சித் திட்டங்களானாலும் அமைந்திருக்கின்றன.

மத்தியிலே வெளியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டமானாலும், மாநிலத்திலே வெளியிடப்பட்ட வரவு செலவுத் திட்டமானாலும், இவற்றில் ஏதாவது பாட்டாளி மக்களின் உரிமைகளுக்கு வழிவகுக்கக் கூடியதாக அமைந்திருக்கிறதா என்றால் இல்லை.

மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் வாரிசு வரிரத்துச் செய்யப்படுவதாக அறிவித்தார்கள். நான் சட்டமன்ற மேலவையிலே வரவு செலவுத் திட்டத்தில் பேசுகையில் கழகத்தின் சார்பாக கருத்துக்களை அறிவித்தபோது இதைக் குறிப்பிட்டேன்.

நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் நிதிநிலை அறிக்கையைப் படித்த நேரத்தில் வாரிசு வரி ரத்து செய்யப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மை என்ன தெரியுமா? அதற்கு முதல் நாள் நிதிநிலை குறித்த விளக்க அறிக்கை ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தரப்பட்டது. அதில் இந்த வாரிசு வரியின் மூலமாக மத்திய அரசுக்கு ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய தொகை இருபது கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பணக்காரர்கள் இறந்து விடுவார்களேயானால் அவர்களது சொத்துக்களின் மீது விதிக்கப்படும் வரி-அதன் மூலம் மத்திய அரசுக்கு இருபது கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று முதல்நாள் வரையிலேயே ஆய்வறிக்கை கூறுகிறது. ஆனால் நிதியமைச்சர் நாடாளுமன்றத்தில் பட்ஜெட் படிக்கும் போது வாரிசு வரி ரத்துச் செய்யப்படுகிறது. அதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது தெரியுமா? இந்த வாரிசு வரியினால் எந்தப்பயனும் இல்லை, இதனால் எந்த வருமானமும் அரசுக்குக் கிடைப்பதில்லை. எனவே அதை நாங்கள் ரத்துச் செய்கிறோம் என்று அறிவிக்கிறார்கள்.

அப்படியானால் முதல்நாள், வாரிசு வரி மூலம் இருபது கோடி ரூபாய் கிடைக்கிறது என்று ஆய்வறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கு என்ன பொருள்? இருபது கோடி ரூபாய் கிடைப்பதாகச் சொல்லப்பட்டு பின் எதுவுமே கிடைப்பதில்லை யென்று மறுநாள் காலையில் அறிவிக்கப்படுகிறது என்றால் அந்த ஒரு இரவில் இடையில் நடைபெற்ற சம்பவங்கள் என்ன?

முதலாளிகளுக்கு — சீமான்களுக்கு — செல்வந்தர்களுக்கு — மிட்டா மிராசுகளுக்கு — குட்டிக் குபேரர்களுக்கு இந்த இருபது கோடி ரூபாய் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இதுதான் நவீன இந்தியாவா?

அது மாத்திரமல்ல: இன்னொரு பெரும் அறிவிப்பு. இந்தியாவில் ஏகபோக முதலாளிகள் வளர்ந்துவிடக் கூடாது என்பதற்காக—, ஏற்கனவே இருந்த மத்திய அரசு—இருபதுகோடி ரூபாய்வரையிலே மதிப்புள்ள தொழிற்சாலைகள் இருக்குமேயானால் அவர்களுக்கு இன்னொரு தொழிற்சாலைக்கு அனுமதி கிடைக்காது என்று உச்சவரம்பு வைத்திருந்தது. இந்த உச்சவரம்பை இன்று எந்த அளவிற்கு உயர்த்திருக்கிறார்கள் தெரியுமா? இருபது கோடி ரூபாய் என்று இருந்ததை நூறுகோடி ரூபாய் என உயர்த்தி உச்சவரம்பை வைத்திருக்கிறார்கள்.

ஒருவருக்கு இருபது கோடி ரூபாய் மதிப்புள்ள தொழிற்சாலை இருக்குமேயானால் அவர்கள் இன்னொரு தொழிற்சாலை ஆரம்பிக்கக் கூடாது என்று இருந்த நிலையை மாற்றி அதை நூறுகோடி ரூபாய் வரையிலே இவர்கள் ஆரம்பிக்கலாம் என்கிற சலுகையினை ராஜீவ் காந்தி அறிவித்திருக்கிறார்.

இந்தக் காரியம் இந்தியாவில் தனி நபர்களை—தனி முதலாளித்துவ சக்திகளை—வளர்ப்பதற்குப் பயன் படுமேயல்லாமல், உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்று நாம் ஆசைப்படுகின்ற பொதுவுடைமை தத்துவத்திற்கு லவலேசமும் உதவிடாது என்பதுதான் தி. மு. கழகத்தின் கருத்து.

அது மாத்திரமல்ல: இரண்டு நாட்களாக ஏடுகளில் ஒரு செய்தி அடிபடுகிறது. நவீன இந்தியா எப்படியெல்லாம் உருவாகிறது பாருங்கள்.

தொலைபேசி இலாகா இருக்கிறதல்லவா—அது மத்திய அரசுக்குச் சொந்தம். அதை பகுதி பகுதியாகப் பிரித்து தனி முதலாளிகளிடத்தில் ஒப்படைத்து அவர்களுக்கே சொந்தமாக்கி விடலாமா என்று ஒரு யோசனை இருப்பதாகச்செய்தி வருகிறது.

இதுவரை தொலைபேசிக்கு நாம் கட்டுகின்ற கட்டணம் அரசின் கருவூலத்திற்குச் செல்கிறது, தொலைபேசி இலாகாவின் மூலம்: அந்த நிறுவனத்தை தனியார் வசம் ஒப்படைக்கலாமா என்ற யோசனை இன்றைக்கு சூல் கொண்டிருக்கிறது.

அந்த சூல் டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு உண்மையான சூல்தானு என்று அறியப்படுமா என்பது எனக்கு தெரியாது. அதற்குப் பிறகு தான் ஓராவது மாதம் உடலது தளர்ந்து என்று ஆரம்பித்து பிறகு பத்தாம் மாதம் இனிமேல் தனியாருக்குச் சொந்தம் என்கின்ற தனியுடைமைக் குழந்தை பிறந்தாலும் பிறக்கலாம்.

ஆகதேசிய மயக்கொள்கைக்கு நவீன இந்தியாவில் இடமில்லை என்பதற்கான அடையாளங்கள் தான இவை. எனவேதான் நான் அதனைச் சுட்டிக் காட்ட விரும்பினேன். இவைகளெல்லாம் மத்தியிலே உள்ளவர்கள் நவீன இந்தியாவை உருவாக்குகிறார்களே—அதற்கான திட்டங்கள்.

மத்தியிலே உள்ளவர்கள் அப்படி; இங்கே பாங்கள்—தோழன் எப்படி என்று பார்த்தால் நான் அண்மையிலே ஒரு கிழமை இதழைப்படித்துப் பார்த்தேன். தமிழக சட்டப் பேரவையின் துணை

சபாநாயகர் இந்த ஆண்டிற்கு அனைவரும் படித்து சிரிக்கக்கூடியது ஒரு அருமையான ஜோக்கை சொல்லியிருக்கிறார். அதை அந்தப் பத்திரிகையிலே தலைப்பாக போட்டிருந்தார்கள்.

"இந்தியாவிலேஉண்மையான கம்யூனிஸ்ட் எம்.ஜி.ஆர் தான்" என்பதுதான் 85ஆம் ஆண்டின் நகைச்சுவைத் துணுக்காக வந்திருக்கிறது. நாட்டில் இருக்கிற கம்யூனிஸ்ட் களெல்லாம் கம்யூனிஸ்டுகள் அல்ல. உண்மையான கம்யூனிஸ்ட் எம்.ஜி.ஆர். தான் என்று அவர் சொல்லியிருக்கிறார், எம்.ஜி.ஆர். எப்படி கம்யூனிஸ்ட் என்பதை அவர் சொல்லி இருக்கிறாரா என்று பார்த்தேன். ஆனால் அவர் சொல்லவில்லை.

ஆனால் எம்.ஜி.ஆர். எப்படி கம்யூனிஸ்ட் என்பதற்கு நான் வாதங்களை வைக்க விரும்புகிறேன்.

தி.மு. கழகத்தின் சார்பாக தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பை நான் ஏற்றிருந்தபோது, தமிழகத்தில் படிப்படியாக ஒவ்வொரு மாவட்டமாக எல்லா பேருந்துகளையும் தேசியமயமாக ஆக்க வேண்டும் என்கின்ற ஒரு திட்டத்தை சிந்தித்து, அதை அவசரச் சட்டமாக பிரகடனப்படுத்தி, முதற்கட்டமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பேருந்துகளெல்லாம் ஒரு பொங்கல் நாளில் அரசுடைமையாக்கப்பட்டன. அதற்கு அடுத்த மாவட்டத்தில் வருவதற்கு முன்பாக பேருந்து முதலாளிகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றம் கழக அரசு பேருந்துகளை தேசியமயமாக்கியது சரிதான் என்று தீர்ப்பு வழங்கியது, உடனே பஸ் முதலாளிகள் உச்ச நீதிமன்றம் சென்றார்கள். அப்போது நெருக்கடி நிலையை நாம் எதிர்த்தோம் என்ற காரணத்தினால் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அப்படி ஆட்சி கலைக்கப்பட்டபோது இங்கே கவர்னர் ஆட்சி நடைபெற்ற போது உச்சநீதிமன்றத்தில் பஸ் முதலாளிகள் வழக்காடிக் கொண்டிருந்தார்கள்

பஸ் முதலாளிகளின் பெருமுயற்சியின் காரணமாக அந்த வழக்கு ஏதோ ஒரு காரணத்துக்காக தள்ளி போடப்பட்டுக் கொண்டே வந்தது. அந்த நேரத்தில் இங்கே கவர்னராக இருந்த சுகாதியா அந்தச் சட்டம் குறித்து எந்தத் தீர்ப்பு வந்தாலும் வரட்டும். அதுவரை இனிமேல் பஸ் முதாலாளிகள் மூன்று பஸ்களுக்குமேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்று ஒரு அவசர ஆணை பிறப்பித்தார். அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். தலைமையில் ஆட்சி வந்தது, அப்போதும் அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது, கடந்த ஓராண்டிற்கு முன் அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. என்ன தீர்ப்பு தெரியுமா?

கழக ஆட்சிக் காலத்தில் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்த போது பஸ்களை தேசியமயமாக்கி கொண்டுவரப்பட்ட சட்டம்—சமுதாயத்திற்குத் தேவையான ஒரு சட்டம். எனவே அந்தச் சட்டம் செல்லுபடியாகும் என்று சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது.

நம்முடைய கம்யூனிஸ்ட் எம். ஜி. ஆர். என்ன செய்தார் தெரியுமா? அந்தத் தீர்ப்பைக் கையிலே வைத்துக்கொண்டு; பஸ் முதலாளிகளை யெல்லாம் அழைத்து இதோபாருங்கள் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பின்படி அன்று கருணாநிதி கொண்டுவந்த சட்டத்தை நான் நிறைவேற்றப் போகிறேன் என்று சொன்னார். பஸ் முதலாளிகள் நடுங்கினர்கள்.

எம். ஜி,ஆர். அடுத்துச் சொன்னர் ''நடுங்காதீர்கள்—நீங்கள் எனக்குத் தரவேண்டியதைத் தந்தால் இந்தச் சட்டத்தை நான் குப்பைக்கூடையிலே கொஞ்ச நாளைக்குப் போட்டு வைக்கிறேன். இல்லாவிட்டால் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்றார்''. தொகை பேசப்பட்டது. அது வரவேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தது. அதன்பின் என்ன ஆயிற்று தெரியுமா?

ஒருவர் மூன்று பஸ்கள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று சுகாதியா செய்திருந்த அறிவிப்பை —ஒருவர் ஐந்து பஸ்கள் வைத்துக்கொள்ளலாம் என்றும். ''பஸ் தேசியமயச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதில்லை. பஸ் முதலாளிகளே நான் இருக்கும்வரை நீங்கள் பயப்படத் தேவையில்லை'' என்றும் அப்போதும் பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டு—ஆண்டு தோறும் பெறவேண்டியதைப் பெற்றுக்கொண்டு—பஸ் தேசிய மயச் சட்டத்தை இன்று எங்கேயோ ஒரு மூலையில் போட்டு விட்டார்கள். எனவே எம்,ஜி,ஆர். ஒரு கம்யூனிஸ்ட் என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீரவேண்டும், இப்படிப்பட்ட கம்யூனிசம் தேவைதானா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் தமிழக அரசு சம்பந்தப்பட்ட வேறு விவகாரங்களை யெல்லாம் இங்கு பேசப்போவதில்லை. பெதுவுடைமைக் கொள் கைக்கும்—மத்திய அரசுக்கும்—அதன் பாங்களாக இருக்கின்ற மாநில அரசுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன ஒரு வரவு செலவுத் திட்டத்தை தாக்கல்செய்தார். அந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு வரியினை அறிவித்தார். என்ன வரியென்றால் விசைப்படகுகளைப்

பயன்படுத்தி இருல் மீன்களைப் பிடித்து அவைகளை ஏற்றுமதி செய்கிறார்களே அப்படி ஏற்றுமதி செய்யப்படும் இருல் மீன்களுக்கு வரி என்று அறிவிக்கப்பட்டது.

இந்த வரியை ஒருவேளை தள்ளிவிடுவார்களோ என்ற பயத்தால் ஆளும் கட்சியைச் சேர்ந்த கொஞ்சம் துடிப்புள்ள சிலர் சட்டமன்றத்திலே "தயவு செய்து இந்த வரியை ரத்து செய்துவிடாதீர்கள். இது தமிழ்நாட்டில் பத்துப் பன்னிரண்டு முதலாளிகளைத்தான் பாதிக்கக்கூடிய வரி. அந்த முதலாளிகளும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வேறு மாநிலங்களைச் சேர்ந்த பணத்திமிங்கலங்கள். இந்த வரியினால் சாதாரண மீனவன் பாதிக்கப்படுவதில்லை. எனவே கொழுத்த பணக்காரர்கள் மீது விதிக்கப்பட்ட இந்த வரியை யார் பேச்சைக் கேட்டும் ரத்து செய்யக்கூடாது" என்று பேசினார்கள். எனக்கேகூட மகிழ்ச்சியாக இருந்தது.

ஆனால் திருச்செந்தூர் இடைத் தேர்தல் வந்தது. தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் நான் நெல்லை மாவட்ட சுற்றுப் பயணத்தை மேற் கொண்டிருந்தபோது பத்திரிகைகளைப் பார்த்தேன். அனைத்துப் பத்திரிகைகளிலும் ஒரு முழுப் பக்க விளம்பரம் வந்திருந்தது. அந்த விளம்பரங்களில் முதலமைச்சர் எம்.ஜி. ஆருடையபடத்தை பெரிய அளவில் வெளியிட்டு, நன்றி நன்றி நன்றி எனத்தலைப்பிட்டு, இருல் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டவரியை ரத்து செய்வதைப்பற்றி மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் அதுவரை அந்த வரியை ஒத்திவைக்கிறேன் என்றும் அறிவித்த முதலமைச்சருக்கு நன்றி என்று விளம்பரம் செய்திருந்தார்கள். அந்த வரியை ரத்து செய்ய பரிசீலனை செய்கிறார். அப்படி பரிசீலனை செய்வதற்காக வரி ஒத்திவைக்கப்படுகிறது. அதற்காக அந்த சங்கத்தின் சார்பில் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

பத்துப் பன்னிரண்டு முதலாளிகளுக்காக இந்தசலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சலுகையை அவர்களுக்கு அளித்தால்தான் அவர்கள் திருச்செந்தூர் நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுடைய பங்கைச் செலுத்துவார்கள். இடையிலே அதற்காக பேரம்பேசிய வருக்கும் கிடைக்க வேண்டியது கிடைத்திருக்கும். நான் அவர் பெயரையெல்லாம் சொல்ல விரும்பவில்லை.

ஆக பெரும் பண அதிபர்கள் பணத் திமிங்கலங்களைப் பாதிக்கக்கூடிய வரியை அறிவித்து விட்டு, அந்த வரியை நாங்கள் ஒத்திவைக்கிறோம்; ரத்து செய்வதைப் பற்றி பரிசீலனை செய்கிறோம்

என்று அறிவித்திருக்கிறாரே தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். — அவர்தான் தலைசிறந்த கம்யூனிஸ்ட்டாம்! நம்பச் சொல்கிறார்கள். நம்ப முடியுமா?

பஸ்களை தேசியமயமாக்க முடியாத — சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வந்தாலென்ன, வராவிட்டாலென்ன என்று தூக்கி எறிந்து விட்டவர்—பணக்காரர்களுக்கு மாத்திரம் பாதிக்கக்கூடிய ஒருவரியை ஒத்தி வைத்து விட்டவர்—இன்றைக்கு மே தினத்தில் உழைக்கின்ற வர்க்கத்திற்காக வாழ்த்துக் கூறுகிறார் என்றால் நாம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இங்கு எனக்கு முன் பேசும் போது குறிப்பிட்டார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சிம்சன் பிரச்சினை எழுந்தது. சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்று நம்முடைய தளபதி பிரதாப்சந்திரனையே பறி கொடுத்தோம். உங்களுக்குத் தெரியும். அந்த சிம்சன் பிரச்சினையில் தி. மு. கழக அரசு வீண் கௌரவம் பாராட்டவில்லை. எப்படியாவது அங்கே அமைதி நிலவி னால் போதும் என்பதற்காக அங்குத் தொழிற்சங்கத்தலைவர் காட் டூர் கோபால் அவர்களையே ராஜினாமா செய்யும்படி தி.மு. கழகத் தின் சார்பாக ஆணையிடப்பட்டு- அங்கே அமைதியை உருவாக் கினேம். அதற்குப் பிறகு கூட ஏறத்தாழ நானூறு பேரையும் வேலையில் சேர்க்க வேண்டும் என்று சொன்னேன். பேச்சுவார்த் தையின் முடிவில் முதலமைச்சர் என்ன முடிவு சொல்கிறாரோ அந்த முடிவைத் தொழிலாளர் பிரதிநிதிகளும், நிர்வாகத்தினரும் ஏற்றுக் கொள்வது என்று ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின்படி ஆறு மாதம் கழித்து நான் முடிவு செய்வதென் றும், அப்படி முடிவு அறிவிக்கப்படுகிற வரை வேலையில்லாமல் இருக்கின்ற நானூறு தொழிலாளர்களுக்கும் மாதா மாதம் அவர் களுக்குரிய சம்பளத்தைத் தரவேண்டும் என்றும் நான் சொன்னதும் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அந்த ஆறு மாத காலமும் அந்தத் தொழிலாளிகளுக்கு சம்பளம் அளிக்கப்பட்டது.

ஆறு மாதத்திற்குப் பிறகு அந்த நானூறுபேரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவைத்தான் நான் அறிவித்தேன்.

அதே சிம்சன் தொழிற்சாலையில் பன்னிரண்டு பேர் பிரச்சினை ஓராண்டு காலமாக முதலமைச்சர் முடிவுக்கு விடப்பட்டு அந்த பன்னிரண்டு பேரும் இன்னும் திரிசங்கு சொர்க்கத்தில் தான் இருக் கிறார்கள். அவர்களை மீண்டும் சிம்சனிலே வேலைக்கு எடுத்துக்

கொள்ள வேண்டுமென்று ஒரு முடிவான கருத்தை-அறிவுரையை முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் ஆணையை — இன்னும் இந்த அரசின் சார்பில் வெளியிடவில்லை என்பதை இந்த மே தின விழாவில் நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல இங்கே மாதவரம் பால் பண்ணையில் கிட்டத்தட்ட 1300 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக அவர்கள் பாதிக்கப்பட்டார்கள்? மதுரையிலே பால் பண்ணையிலே நடைபெற்ற ஒரு கிளர்ச்சியைஒட்டி அந்தத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஒரு அனுதாப அடையாள வேலை நிறுத்தத்தில் ஒருநாள் ஈடுபட்டார்கள். அதற்காக அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். கடந்த பிப்ரவரி மாதம் 6ம் தேதி அந்த தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தும் கூட இன்றுவரை இந்த அரசாங்கம் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

தி.மு.கழக ஆட்சியில் கூட மாதவரம் பால் பண்ணையிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பால் பண்ணைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் என்ன சங்கடம் என்றால் அங்குள்ள மாடுகளிடம் பால் கறக்கப் படாதகாரணத்தால் அவற்றின் மடிகள் வீங்கி அதன் காரணமாக அவை நோயுற்று பல சங்கடங்களுக்கு ஆளாக நேரிடும்.

கழக ஆட்சியில் அப்படி அங்கு வேலை நிறுத்தம் நடைபெற்ற போது சிறைச்சாலையில் இருந்த கைதிகளையெல்லாம் மாதவரத்திற்கு அனுப்பி அவர்களை வைத்து பால் கறக்கச் சொன்னேன். வேலை நிறுத்தம் நடைபெற்றவரை இப்படிச் செய்யப்பட்டது. அதற்கிடையில் தொழிலாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்கள். அந்தத் தொழிலாளர்கள் பழி வாங்கப்படவில்லை. ஆனால் மதுரையில் நடைபெற்ற பால்பண்ணைத் தொழிலாளர் கிளர்ச்சிக்கு அனுதாப மாக ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக 1300 தொழிலாளர்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு மேலாக பழி வாங்கப்பட்டு நீதிமன்றம் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியும் கூட அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை எண்ணிப் பார்க்கும் போது, இந்த மே தினத்தில் நமக்கென்று வாய்த்திருக்கின்ற அரசுகள் மத்தியிலே யானாலும், மாநிலத்திலேயானாலும், தொழிலாளர்நல அரசாக இருக்கின்றனவா?

கழக ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் நலிந்த நிலையில் உள்ள இயங்கமுடியாத ஆலைகள் பதின்மூன்று இருந்தன. அந்த பதின் மூன்று ஆலைகளையும் தி.மு. கழக ஆட்சி முயற்சி எடுத்து அரசாங் கத்தின் சார்பில் அவற்றை இரண்டாண்டு காலம் நடத்த முன் வந்து, அதற்குப் பிறகு தேசிய பஞ்சாலைக்கழகம் மத்திய அரசினுல் தொடங்கப்பட்டு அந்த கழகத்திடம் அந்த பதிமூன்று ஆலைகளும் ஒப்படைக்கப்பட்டு அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆனுல் இன்றைக்கு நிலைமை என்ன? கோவையில் நாலு ஆலை கள்: பாண்டிச்சேரியில் ரோடியர் ஆலை, அங்கே ஏழாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் பல ஆண்டுகளாக பட்டினி கிடக்கின்றன. அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

தி.மு.கழக ஆட்சிக்காலத்தின்போது தேசிய பஞ்சாலைக் கழகம் எடுத்துக் கொண்டதைப் போல கோவையில் மூடிக்கிடக்கின்ற நாலு ஆலையையும், பாண்டிச்சேரியில் உள்ள ரோடியர் மில்லையும் இன்றைக்கு எடுத்துக் கொள்ள அரசு ஏன் முன்வரவில்லை?

ராஜீவ் காந்திக்கு முன்பு நடைபெற்ற ஆட்சியில் இந்தியாவில் 102 நலிந்த ஆலைகள் தேசிய பஞ்சாலைக் கழகத்தால் ஏற்றுக்கொள் ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன. ஆனுல் இன்றைக்கு நூற்றுக் கணக்கான ஆலைகள் நலிந்த நிலையில் இருக்கின்றன. அவற்றை எடுத்துக்கொள்ளும் முயற்சி மத்திய அரசினுல் மேற்கொள்ளப்பட வில்லை. இதற்குப் பெயர்தான் நவீன இந்தியா! இந்த இந்தியா வைத்தான் உருவாக்கப் போகிறோம் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி— சங்க இலக்கியத் தலைவராக அவரும்— சங்க இலக் கியத்தில் வரும் பாங்கனைக இங்கே இருக்கின்ற மாநில அரசும் தாங்கள் தொழிலாளர்களின் தோழர்கள் என்று வெட்கமில்லாமல் என்றுல்—அது கடுமையான வார்த்தை—நாணமில்லாமல் சொல் லிக் கொண்டிருக்கிறார்கள். இதை இந்த மே தினத்தில் பாட்டாளி வர்க்கம் ஏற்கமுடியுமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

இதுவரையில் நான் பேசிய கருத்துக்கள் அத்தனையும் தமிழகத் திலே இருக்கின்ற நமது பதினுன்கு கட்சி கூட்டணியில் உள்ள கட்சி களுக்கு கிட்டத்தட்ட உடன்பாடான கருத்துக்கள். அதிலும் குறிப் பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உடன்பாடான கருத்துக் கள். இதில் எந்த வேறுபாடும் இருக்கமுடியாது என்று தான் கருதுகிறேன்.

இலங்கையில் தோட்டத் தொழிலாளிகளாக ஏறத்தாழ பத் துப் பனிரெண்டு லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழகத்திலே

விஷயம் தெரியாத பாமர மக்கள் பலபேர் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியும். தேர்தல் முடிவுகளே அதைக் காட்டும். அப்படிப்பட்ட பாமர மக்களிடத்தில் சிலர் வேண்டுமென்றே விஷமத்தனமாக என்னகூறுகிறார்கள் என்றால், இலங்கைக்கு இங்கிருந்து பிழைக்கப் போனவர்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலைசெய்து பிழைக்க வேண்டியதுதானே! இவர்கள் ஏன் தனிநாடு கேட்கிறார்கள் என்று இங்கே உள்ள பாமர மக்கள் கேட்பதாக நான் அறிந்தேன்.

இது நாம் வெற்றி பெற்ற இடம். பாமர மக்கள் நிறைந்த இடமல்ல. இருந்தாலும்கூட நீங்கள் போய் மற்ற பாமரர்களிடத்தில் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இலங்கையில் தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வெள்ளைக்காரர்களால் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள். அங்கு அட்டை கடிக்கும்; பாம்பு கடிக்கும்; தேள் கடிக்கும். இவற்றுக்கெல்லாம் தாக்கு பிடிக்கக்கூடிய தமிழர்களை அழைத்துக்கொண்டு போனது உண்மை. அது ஒரு பகுதி.

அதே நேரத்தில் இலங்கையில் ஆண்டாண்டு காலமாக பூர்வீகமாக தமிழர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஏறத்தாழ இருபது லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தையும், இலங்கையின் கிழக்கு பகுதியையும் தங்களுக்குத் தாயகமாகக் கொண்டவர்கள்.

நூற்றுஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையை ஆண்டுவந்த கண்டி ராஜா என்கின்ற விக்கிரமசிங்க ராஜா வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு அங்கிருந்து மதுரை கொண்டு வரப்பட்டு, அங்கு சிறையில் வைக்கப்பட்டான். அவனது உற்றார் உறவினர்கள் அங்கிருந்த காரணத்தால் தப்பிவிடக்கூடும் என பயந்து அவனை வேலூர் சிறையில் கொண்டு வந்து அடைத்தார்கள். பதினைந்து ஆண்டுக்கு மேலாக அவன் சிறையிலேயே இருந்து செத்துப் போனான்.

எனவே இலங்கையை பூர்வீகமாக ஆண்ட இனம் தமிழினம். ஆகவே புராணத்தை பார்த்தால் கூட இராவணன் இலங்கையை ஆண்டான்.

"தென்திசையைப் பார்க்கிறேன் — எந்தன்
சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குதடடா!"

என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

இன்றைக்கு தென்திசையைப் பார்க்கின்றேரும். சிந்தையெல்லாம் துடிக்குதடா துடிக்குதடா என்று பாடவேண்டிய சூழ்நிலையில், இலங்கை நிகழ்ச்சிகள் நாள்தோறும் அடுக்கடுக்காக நடைபெறும் கொடுமைகள் நம்முடைய செவிப் பறையைக் கிழித்துக் கொண்டிருக்கின்றன.

அங்கே உள்ள இருபது லட்சம் பூர்வீகத் தமிழர்கள் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்துவருபவர்கள். அவர்கள் அந்த மண்ணிலேயே உற்பத்தியான விதைகள். இங்கேயிருந்து கொண்டு செல்லப்பட்ட விதைகள் அல்ல.

அந்த விதைகளிலிருந்து செடிகளும் கொடிகளும் கிளம்பி அவற்றில் பூப்பூத்து மலர்ந்து காயாகிக் கனியாகி மீண்டும் விதைகள் உற்பத்தியாக இப்படி இருக்கும் இருபது லட்சம் தமிழர்கள் இலங்கைத் தரணியை பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

நமது இந்திய அரசு உலக, நாடுகளுக்கு இந்த உண்மையைச் சொல்லவில்லை. உலகத்திலே உள்ள மற்ற நாட்டுக்காரர்கள் என்ன எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பிழைக்கப் போன தமிழன்தான் தனிநாடு கேட்கிறான் போலும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

எப்படிக் கேட்க முடியும்? நான் பிரிவினை கேட்பதாக மார்க்சிஸ்ட் தோழர்கள் எண்ணிக் கொள்ளக் கூடாது. தமிழ்நாடு தமிழருக்கே என்று கேட்பதாக வைத்துக்கொள்வோம். அப்படிச் சொல்வதாக வைத்துக் கொண்டால் கூட அதை இங்கே இருக்கின்ற தமிழன்தான் கேட்க முடியுமே தவிர இங்கே பிழைக்க வந்த மார்வாடிகள் கேட்க முடியுமா? முடியாது. இதை வாதத்திற்காகச் சொல்கிறேன். ஆகா கருணாநிதி பிரிவினை வாதம் பேசுகிறான் என்று யாரும் கருதத் தேவையில்லை. ஒற்றுமையைப் பற்றி எங்களுக்கு உபதேசிக்க யாரும் வரவும் வேண்டாம். ஒற்றுமையைப் பற்றி உபதேசிக்க எங்களைவிட இந்தியாவில் வேறு யாரும் இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை.

இந்திய அரசு செய்த மிகப் பெரிய தவறு— இலங்கையின் உண்மை நிலை என்ன என்பதை உலக நாடுகளுக்கு விளக்கவில்லை.

இந்தக்குற்றச்சாட்டை கருணாநிதி மாத்திரம் சொல்லவில்லை. 1983ம் ஆண்டு ஜூலைத் திங்கள் இலங்கையில் இனப் படுகொலை நடைபெற்ற அடுத்தமாதம் 'இந்து' பத்திரிகையில், "இலங்கையில்

பிழைக்கப்போன தமிழர்கள்தான் நாடு கேட்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் அதுவல்ல. அங்கே உள்ள பூர்வீகத் தமிழர்கள் தான் தங்கள் உரிமைகளைக் கேட்கிறார்கள் என்ற உண்மையை உலக நாடுகளுக்கு விளக்க இந்தியா தவறிவிட்டது" என்று எழுதியது.

அதே கருத்தை டைம்ஸ் ஆப் இந்தியா என்கின்ற ஆங்கிலப் பத்திரிகையும் எழுதியது.

ஆக இந்த உண்மையை உலக நாடுகளுக்குச் சொல்லி, இது வரை உலக நாடுகளின் அபிப்பிராயத்தை சிங்கள அரசுக்கு விரோதமாக – தமிழர்களுக்கு சாதகமாக இந்தியா எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஆதரவாகத் திரட்டவேண்டிய பெரும் பொறுப்பை மத்தியஅரசு தட்டிக்கழித்துவிட்டது என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

எனவேதான் வட்டமேஜை மாநாடுகளால்—பேச்சுவார்த்தைகளால் பிரச்சினை தீராது என்று 83-ம் ஆண்டிலேயே தி.மு. கழகம் போராட்டத்தைத் தொடங்கியது.

இன்றைக்கு யார் யாரோ எனக்கு அறிவுரை கூற வருகிறார்கள். நான் அறிவுரைகளை அலட்சியப் படுத்துபவனல்ல. அறிவுரைகளை வரவேற்பவன். அன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எத்தனையெத்தனை போராட்டங்கள் நடைபெற்றன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

கழகத்தின் சார்பில் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம், திராவிடர் கழகத்தின் சார்பில் சுதந்திர நாளை துக்க நாளாக கொண்டாடினார்கள். நண்பர் நெடுமாறன் தியாகப்பயணம் மேற்கொண்டார். அ.தி.மு.க. வினர்கூட கறுப்புச்சட்டை அணிந்து தங்கள் வேதனையை வெளிப்படுத்தினர்கள். காங்கிரஸ்காரர்களும் ஒருநாள் ஊர்வலம் நடத்தி கண்டனக் குரல் எழுப்பினர்கள்.

அப்போது எங்கேயோ ஆப்ரிக்க நாட்டிற்குச் சென்றிருந்த குமரி அனந்தன் திரும்பி வந்து திடீரென ஒரு அறிவிப்பைச் செய்து விட்டு என் வீட்டிற்கு வந்தார். நான் வடஆற்காடு மாவட்டத்திற்கு ஒரு பொதுக்கூட்டத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.

"எங்கள் கட்சியின் சார்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்" என்றார் குமரி அனந்தன். என்ன என்று கேட்டேன். "இந்திரா காந்தியின் கொடும்பாவியை கொளுத்தப் போகிறோம்" என்று சொன்னார். நான் யோசித்தேன்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்றுகோட்டார். "இல்லை. இந்திரா காந்தியின் கொடும்பாவியைக் கொளுத்துவது நல்லதல்ல: அது பண்பாடான காரியமாக இருக்காது" என்று சொன்னேன். ஏன்என்று கேட்டார். "பிரதமர் ஓர் ஆண் மகனை இருந்து அவருடைய கொடும்பாவியைக் கொளுத்தினால் பொறுத்துக் கொள்ளலாம். இந்தியப் பிரதமர் பெண்மணியாக இருக்கிறார். கொடும்பாவி கொளுத்துவதற்காக ஒரு பொம்மையைச் செய்யும் போது அவரவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு பொம்மையைச் செய்து அதற்கு சேலையைக்கட்டி அதைத்தெருவிலே இழுத்துக் கொண்டு போனால் அது தாய்குலத்தையே அவமானப்படுத்துவதாக இருக்கும். எனவே அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடுங்கள்" என்று சொன்னேன்.

இன்று அவர்கூட எனக்கு இந்தப் போராட்டம் தேவையில்லை என்று அறிவுரை சொல்கிறார்.

'அன்று நான் அப்படிச் சொன்னவுடன்' நான் அறிவித்து விட்டேனே. பத்திரிகைகளில் எல்லாம் வந்து விடும். என்ன செய்வது என்று கேட்டார். "பிரதமர் கொடும்பாவியை கொளுத்தக் கூடாது" என்று சொன்னேன். அதற்குப் பிறகு அவர் அதை மாற்றி கொடும்பாவியை அல்ல, இந்திராகாந்தியின் படத்தை எரித்தால் போதும் என்று கண்ணியமாக போராட்டத்தை அறிவித்தார்.

குமரி அனந்தன் போன்றவர்களுக்கெல்லாம் அவ்வளவு குமுறலும் கொதிப்பும் அன்றைக்கு இருந்தது. இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு இன்னும் அதிகமாக ஆகியிருக்க வேண்டிய கொதிப்பு ஏன் அடங்கி விட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

அது மாத்திரமல்ல; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான உமாநாத், ஐந்தாறு நாட்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் பேசினார்." கருணாநிதி பிரிவினை எண்ணத்தை தமிழகத்திலே உருவாக்குகிறார். தேர்தல் பாடத்தை அவர் மறந்து விடக்கூடாது" என்று பேசினார்.

ஏதோ தேர்தல் பாடம் எனக்கு மட்டும் கற்பிக்கப்பட்டதைப் போல நண்பர் உமாநாத் கருதிக் கொண்டு பேசினார்.

பிரிவினையை ஆதரித்தோ பிரிவினை தமிழகத்தில் வேண்டுமென்றோ நான் எந்த கூட்டத்திலும் பேசவில்லை. நமது கழகத்தின் சார்பாக கொள்கை பரப்புச் செயலாளர் — பொதுக்குழுவிலும்

செயற்குழுவிலும், நிர்வாகக்குழுவிலும் கலந்து உரையாடி ஒரு முடிவு எடுக்கப்பட்டபிறகு அந்த முடிவுகளை பிரச்சாரம் செய்கின்ற கொள்கைப் பரப்புச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் நண்பர் கந்தப்பன். முரசொலி பத்திரிகையில் ஒரு விளக்கமே எழுதினார்.

"எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் பிரிவினையை ஆதரித்து எங்கும் பேசவில்லை. இந்தியாவில் ஒரு பிரிவினை வந்து விடக்கூடாது என்று எச்சரித்துத்தான் அவர் பேசியிருக்கிறார். தோழமைக்கட்சி யென்று இப்படிப்பட்ட விவாதங்களை வெளிப்படையாக கூறுவது நமது தோழமைக்கு அழகல்ல" என்று மிகுந்த கண்ணியமாக பண்புள்ள முறையில் கந்தப்பன் எழுதினார்.

அதற்குப் பிறகு அவர்கள் அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்த்தோம்.

ஆனால் இன்றைக்கு மார்க்சிஸ்ட் கட்சியின் குழுவே கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதனை எனது அருமை நண்பர் நல்லசிவன் ஒரு அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார். அதிலே அவர் சொல்கிறார்: "இலங்கையில் தமிழர் பகுதிகளில் இருந்து ராணுவத்தை வாபஸ் வாங்கு! அடக்குமுறையை நிறுத்து! தமிழ் மக்கள் பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காண அனைத்து தமிழ்மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்து" இந்தக் கோரிக்கைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கை.

இங்கேதான் நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். இலங்கைப் பிரச்சனை அவர்களது உள்நாட்டுப் பிரச்சனை. அங்கு ராணுவத்தை அனுப்ப வேண்டுமெனச் சொல்வது தவறுஎன்று சொல்லுபவர்கள் அங்கிருக்கின்ற அரசைப்பார்த்து நீ ராணுவத்தை வாபஸ் வாங்கு என்று சொல்வதற்கு மாத்திரம் என்னஉரிமை இருக்கிறது?

அங்கே இராணுவத்தை அனுப்பச் சொல்ல நமக்கு உரிமை இல்லையென்றால், அந்த அரசாங்கத்தைப் பார்த்து இராணுவத்தை வாபஸ் வாங்கு என்று சொல்ல என்ன உரிமை இருக்கிறது.

பிறகு ஜெயவர்த்தனே நம்மைப் பார்த்து பஞ்சாபில் உள்ள ராணுவத்தை வாபஸ் வாங்கு என்று சொல்ல அவனுக்கு எவ்வளவு நேரமாகும்?

அதைப்போல அடக்கு முறைகளை நிறுத்து என்று ஜெயவர்த்தனேயிடம் சொல்ல நாம் யார்? அவன் திருப்பிக்கேட்க மாட்டானா?

அது உள்நாட்டுப் பிரச்சினை தலையிடக்கூடாது என்றால், அங்கே அடக்குமுறைகளை நிறுத்து என்று சொல்ல நாம் யார்? அவன் கேட்கமாட்டானா?

அங்கே பெரும்பான்மையாக இருக்கின்ற சிங்கள இனம்; அந்த இனத்திற்கு பாதுகாப்பாக இருக்கின்ற சிங்கள ராணுவம்; அந்த ராணுவத்தின் சர்வாதிகாரியாக இருந்து ஆட்டிப் படைக்கிற ஜெயவர்த்தனே. அந்த ஜெயவர்த்தனேயின் பின்னால் நின்று புத்தமத போதனைகளைச் செய்து கொண்டு புத்தம் சரணம் கச்சாமி என்று சொல்லிக்கொண்டு தமிழன் மரணம் கச்சாமி என்கின்ற அளவுக்கு அங்கே கொடுமைகள் புத்த மதத்தின் பேரால் நடைபெறுகின்ற பொல்லாங்குகள் இவைகளுக்கெல்லாம் ஒரே முடிவு இனி தமிழர் சிங்களவர் ஒன்றுக சேர்ந்திருக்க முடியாது என்பதுதான். பூர்வீகமாக வாழும் தமிழர்களுக்கு தமிழ் ஈழம் தரவேண்டுமே தவிர, வேறு மார்க்கமில்லை என்று சொன்னால், அவர்கள் தி. மு. கழகத்தைக் கண்டிக்கிறார்கள்.

இந்திய அரசு ராணுவத்தை அனுப்ப வேண்டும்.

இலங்கையுடன் ராஜீய உறவை துண்டித்துக் கொள்ள வேண்டும்.

ஈழத்தை தனி நாடாக ஆக்கவேண்டும். என்பதுதான் இலங்கைத்தமிழர் பிரச்சினையில் தி.மு. கழகத்தின் அடிப்படையான கோரிக்கையாக இருக்கிறது.

தி. மு. கழகத்தின் இந்த கோரிக்கைகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவாது என்று சொல்கிறார்கள்.

இலங்கைக்கு ராணுவத்தை அனுப்பச்சொல்லி தி.மு. கழகம் வற்புறுத்துவது சரியல்ல என்கிறார்கள். தமிழ்ஈழம் கேட்பது சரியல்ல என்கிறார்கள். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள ராஜீயஉறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்பது சரியல்ல என்கிறார்கள்.

ஆனால் இதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி 3—9—84 அன்று சென்னை தி.மு.க. சட்டமன்றகட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் "இலங்கையுடனான ராஜீயஉறவுகள் அனைத்தையும் இந்தியா துண்டித்துக் கொள்ளவேண்டும்." என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நண்பர் வரதராஜன் கையெழுத்திட்டிருக்கிறார்.

ஆனால் இப்போது இலங்கையுடனான ராஜிய உறவுகளைத் துண்டித்துக் கொள்வது இலங்கைபிரச்சினை தீர உதவாது என்று மார்க்சிஸ்ட் கட்சி சொல்வதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை.

அது மாத்திரமல்ல. உலக ஆதிக்க தீட்டத்துடன் செயல்படும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்த பிரச்சினையில் நேரடியாக தலையிட இது வழிவகுக்கும் என்று மார்க்சிஸ்ட் கட்சி கூறுகிறது.

எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பயப்படுகிறது என்றால் என்னால் நம்பமுடியவில்லை.

அமெரிக்கக்காரன் அவ்வளவு பெரிய கொம்பனா? சோவியத்தை விடவா? பக்கத்திலே இருக்கிற செஞ்சீனத்தை விடவா? அந்தக் கொம்பன் தனதுஆதிக்கத்தை நிலைநாட்ட இந்தியாவிற்கு ஆபத்தை விளைவித்து விடுவான் என்றால், நமிபியா விடுதலை இயக்கமான ஸ்வாப்போவை இந்தியா அங்கீகரித்து விட்டதே; அப்படி அங்கீகரித்தது சரி என்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறதே, அங்கே தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட அமெரிக்காகாரன் வரமாட்டானா?

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இந்தியா அங்கீகரித்திருக்கிறதே! அங்கு அமெரிக்காகாரன் வாலாட்ட மாட்டானா? இதே கம்யூனிஸ்டுகள் இந்திரா காந்தி பங்களாதேஷ் போராட்டத்தில் ஈடுபட்டபோது பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் துண்டாக வேண்டும் என்பதை ஆதரித்ததா — இல்லையா — தி. மு. கழகம் ஆதரித்ததைப்போல!

எனவேதான், இன்று இலங்கையில் நடைபெறும் கொடுமைகள் எந்த அளவிற்கு உச்சகட்டத்திற்கு போயிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்துத்தான் தி.மு. கழகம் வேறுவழியில்லாமல் இந்தக் கோரிக்கைகளை வைத்துள்ளது.

நான் நெல்லையில் பேசியதை குறிப்பிட்டிருக்கிறீர்கள். என்ன பேசினேன்? பேசக் கூடாததையா பேசினேன்? "இந்தியாவில் ஒரு பிரிவினை ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றால் இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் எங்கள் தமிழினத்தைக் காப்பாற்ற இந்திய அரசு முன்வர வேண்டும். அப்படி வரத்தவறினால் இந்தியாவில் ஒரு பிரிவினை வருவதை தடுப்பது என் கையில் இல்லை' என்று பேசினேன்.

இந்தியாவில் பிரிவினைக்காக போராடுவேன் என்று பேசினேன். இல்லையே! ஒரு பதிது பேர் "நாங்கள் பத்தாண்டு காலம் பாராளு மன்றத்திற்குச் செல்ல விரும்பவில்லை. நாங்கள் பிரிவினை தரவேண்டு மென்று கூறுகிறோம்" என்று பேசினுல் அதைத்தடுக்க இந்த கருணநிதிக்கு என்ன உரிமை இருக்கிறது? யாருக்கு அந்த உரிமை இருக்கிறது?

இலங்கைத் தமிழன் அழிந்துவிட்டால்—அந்த இனத்தைக் காப்பாற்ற மத்திய அரசு முன்வராவிட்டால்—அந்த இனமே மூண்டற்றுப் போய்விட்டால்—ஆகா! நாம் இந்தியாவுடன் ஒன்றுக சேர்ந்திருக்கின்ற காரணத்தால் அல்லவா இந்த நிலை என்று யாராவது ஒருவன் எண்ணினுல் அந்த எண்ணம் தீப்பொறியாக மாறி அந்த தீப்பொறி நெருப்பாக மாறி எதிர்காலத்தில் ஒரு பிரிவினைக்கான சூழ்நிலை இந்தியாவில் ஏற்பட்டுவிட்டால் அதைத் தடுக்கின்ற வலிமை இந்த சாதாரண கருணநிதிக்குக் கிடையாது என்று சொன்னுல் நான் பிரிவினை கேட்கிறேன் என்று பொருள்?

1962ம் ஆண்டு இந்தியா சீனுக்காரனுல் ஆக்கிரமிக்கப்பட்ட போது—அதை ஆக்கிரமிப்பு என்றே ஒத்துக் கொள்ளாதவர்கள் கம்யூனிஸ்டுகள். ஆக்கிரமிப்பு என்ற வார்த்தையையே பயன்படுத்த மறுத்தார்கள். சீனுக்காரன் இந்தியாவை ஆக்கிரமிக்கிறுன் என்று எடுத்துச் சொல்லி விலைவாசிப் போராட்டத்தில் அண்ணு உட்பட இருபதாயிரத்திற்கு மேற்பட்டோர் சிறைச்சாலையில் இருந்தபோது சீன ஆக்கிரமிப்பை எதிர்த்த தி.மு. கழகம், மத்திய அரசின் கரங்களை பலப்படுத்தும் என்று அறிக்கை வெளியிட்டு, விடுதலை பெற்றுவந்த வுடன் அண்ணு அவர்கள் வேலூர் கோட்டை மைதானத்தில் "வீடு இருந்தால்தான் ஓடு மாற்றமுடியும். அதைப்போல நாடு இருந் தால்தான் நாம் நமது கோரிக்கைகளை வைக்க முடியும். எனவே நமக்கும் இந்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள கருத்து வேறுபாட்டையெல்லாம் மறந்துவிட்டு நமது பொது எதிரியான சீனத்துக்காரனை விரட்ட அனைவரும் ஒன்றுபடுவோம் வாரீர்' என்று அன்றைக்கு முழங்கியவர் அண்ணு. அப்படி இந்தியாவின் பாதுகாப்பில்—ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருப்பது தி.மு. கழகம்.

அன்றைக்கு கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிப்பு என்ற வார்த்தை யையே ஒத்துக் கொள்ள தயாராக இல்லை. சீனுக்காரன் மீது அவர் களுக்கு இருந்த அன்பு காரணமா? எனக்குத் தெரியாது.

ஆனால் அவர்கள் இன்றைக்கு எங்களைப்பார்த்து நாங்கள் பிரிவினை எண்ணத்தை உருவாக்குகிறோம் என்று சொன்னால் நான் அதை மறுக்கிறேன்.

62-ம் ஆண்டு அண்ணா கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த அந்தக் காலத்திலேயே நாங்கள் பிரிவினை எண்ணத்தைக் கைவிட்டு விட்டோம். கைவிட்டது விட்டதுதான். ஆனால் அண்ணா ஒன்றைச் சொன்னார். "பிரிவினையைக் கைவிட்டு விட்டேன், ஆனால் பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அந்தக் காரணங்களுக்காகத்தொடர்ந்து போராடுவோம்" என்று அண்ணா சொன்னார்.

இன்றைக்கு என்ன நிலைமை? தமிழக நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் டெல்லிபட்டினத்தில் தமிழகத்தின் ஏழாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்க போராடிக் கொண்டிருக்கிறார். கேட்ட தொகையில் பாதித் தொகை கூட ஒதுக்கீடு செய்ய அவர்கள் தயாராக இல்லை.

ஆனால் தமிழக அரசின் சார்பில் அடுத்தடுத்து பேசினோம். இன்னும் கூட பேசுகிறோம் என்று தவணை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் தமிழக அரசுக்குச் சொல்கிறேன். உங்களுக்கும் எனக்கும் ஆயிரம் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் தமிழகத்தின் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இன்னும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்பதற்கு உங்களை விட வேகமாக மத்திய அரசை எதிர்த்து குரல் கொடுக்க தி.மு. கழகம் தயாராக இருக்கிறது.

ஆக; பிரிவினையைக் கைவிட்டு விட்டோம். பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன. அந்த காரணங்கள் எல்லாம் கோரிக்கைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, ஏதோ பிரிவினை எண்ணத்தை நான் தூண்டி விடுவதாக காங்கிரஸ்காரர்களுக்குக் கூட இல்லாத அக்கறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்து, நாம் தோழமை பூண்ட இந்த குறுகிய காலத்திற்குள் என்னை மத்திய அரசுக்குக் காட்டிக் கொடுக்கின்ற இந்தக் காரியத்தில் எனது அன்புக்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் இறங்கியிருப்பதைப் பார்க்க நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன்.

நான் அவர்களுக்கும் சொல்கிறேன்: மத்திய அரசுக்கும் சொல்கிறேன்; உங்களுக்கும் சொல்கிறேன். இந்தியன் என்ற அளவில்

எழுபது கோடிமக்களில் இந்த கருணாநிதியும் ஒருவன். அதே நேரத்தில் தமிழன் என்கின்ற வகையில் ஐந்து கோடிமக்களில் இந்த கருணாநிதி ஒருவன்.

நான் இந்தியன் என்பதற்காக தமிழன் என்ற உணர்வை விட்டு விடமுடியாது. இந்தியன் என்று உரிமை கொண்டாடுகிற காரணத்தினுல் தான் எங்கள், உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள் என்று உரிமையோடு கேட்கிறேன். மதிப்பளிக்க முடியாத நிலை வருமேயானுல் ஐந்து கோடி தமிழர்கள்-எழுபது கோடி இந்தியர்களுக்குள் அடக்கம்தானே இந்தஐந்துகோடி தமிழர்கள்—அழுகின்றகண்ணீர் வெளியிடுகின்ற புலம்பல்; இலங்கைத் தமிழர்களுக்காக வடிக்கின்ற வேதனைவெள்ளம்; எங்களுக்காக ஏன் மத்திய அரசு பரிந்து பேசவில்லை என்கின்ற கேள்வியை எழுப்பும். இந்தகேள்வி எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு என்றுதான் நான் இதைச் சொல்கிறேனே யல்லாமல் வேறு அல்ல.

வீடுகளில் பார்த்திருப்பீர்கள். தான் கோரிய பொருளை கொடுக்காவிட்டால் பள்ளிக்கூடம்போக மாட்டேன் என்றுகுழந்தை சொல்லுமே! எதற்காக? தான்விரும்பிய பொருளைப் பெறுவதற்காக! அதற்காக பள்ளிக்கூடம் போகாமலா இருக்கும்! அதைப் போலத்தான் நானும் சொல்கிறேன்.

அவர்கள் இந்தியாவின் ஒற்றுமை என்பது அரசியல் பேரத்திற்கு உள்ளாக்கப்படக்கூடியது அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியாவின் ஒற்றுமையே அரசியல் பேரத்தால் உண்டாக்கப்பட்டதுதான்.

1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபிறகு இந்தியாவில் உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை யெல்லாம் வல்லபாய் படேல், சில சமஸ்தானங்களை பயமுறுத்தியும், சில சமஸ்தானங்களுடன் பேரம் பேசியும்தான் அந்தசமஸ்தானங்களை ஒன்றுகச் சேர்த்து ஒரு முழு இந்தியாவை உருவாக்கினர்.

ஆக இந்தியாவின் ஒற்றுமை அரசியல் பேரத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது என்பதை மறந்து விடக்கூடாது.

அது மாத்திரமல்ல: இந்தியா சுதந்திரம் பெற்றதே அரசியல் பேரத்தின் அடிப்படையில் தான். முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான், எங்களுக்கு இந்தியா என்று அன்றைக்கேபேரம் பேசித்தான் விடுதலை பெற்றார்கள்.

மாநில சுயாட்சி மட்டும்கேட்ட ஜின்னு அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டிருந்தால் பாகிஸ்தான் என்ற ஒரு நாடே ஏற்பட்டிருக் காது. மாநில சுயாட்சி போதும் என்ற ஜின்னுவிடம் மாநில சுயாட்சி தரமுடியாது என்று சொன்ன காரணத்தினுல், அப்படியா னுல் தனிநாடு கொடு என்று கேட்கின்ற நிலைமை ஏற்பட்டு, அன் றைக்கு வெள்ளைக்காரன் முன்னிலையில் நடைபெற்ற பேரத்தின் விளைவு தான் இந்தியா—பாகிஸ்தான் என்ற இரு நாடுகள்.

ஆக நான் அரசியல் பேரமும் பேசுவேன். என் தமிழர்களுக் காக வீரமும் பேசுவேன். ஆனுல் எந்தநேரத்திலும் சோரம் மட்டும் போகமாட்டேன்.

இனமும் நாடும்.....

''ஐரிஷ் இனத்தின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பது மாத்திரமல்ல, அது அவர்களுக்கான நாடும், உயிர் வாழ்வும் பற்றிய பிரச்சினையாகும். அழிவா அல்லது (தனிநாடுகாண) புரட்சியா என்பதுதான் அவர்களின் முன்னுல் உள்ள கேள்வி. எல்லா ஐரிஷ்காரர்களும் ஒன்றை மட்டும் முடிவாக உணர்ந்துவிட்டனர். அதுதான் ஏதேனும் நடப்பதானுல் அது உடனடியாக நடக்க வேண்டும். அவர்களுக்குத் தனிநாட்டைப் பிரித்துத் தருவதற்கு ஆங்கிலேயர் ஒப்ப வேண்டும். வேறு எதுவும் பயனற்றதாகும்.''.

—மாமேதை கார்ல் மார்க்ஸ்

(ஐரிஷ் இன மக்கள் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து 16 — 12 — 1867-ல் லண்டன் மாநகரத்தில் நிகழ்த்திய உரை)

Wrapper Printed at Gem Press, Madras-1.